# ஹதீஸ்களும் அதன் வகைகளும்

الحديث وأنواعه

Moulavi M.M. Zaky B.A. (Hons)

பகுதி - (1)

அறிஞர்கள் பொதுவாக ஹதீஸ்களை மூன்று வகையாகப்பிரித்து நோக்குவர். இதில் அறிஞர்கள் மத்தியில் முரண்பாடு எதுவும் இல்லை. அவையாவன:

1. ஆதார பூர்வமானவை (ஸஹீஹானவை)
2. பலவீனமானவை (ளஈஃபானவை)
3. ஆதார பூர்வமானவையா பலவீனமானவையா என்பதில் அறிஞர்கள் மத்தியில் கருத்து வேறுபாடுள்ளவை.

## A. ஆதாரபூர்வமானவை:

ஒரு அறிவிப்பு ஆதாரபூர்வமானது என்பதைத் தீர்மாணிப்பதற்கு 5 நிபந்தனைகளை ஹதீஸ்கலை அறிஞர்கள் கொண்டுள்ளனர்.

அவை:

- ஹதீஸ் நபி (ஸல்) அவர்கள் வரை- அறிவிப்பாளர் தொடரைக் கொண்டிருத்தல்.
- இந்த அறிவிப்பாளர் வரிசை- தொடர் துண்டிக்கப்படாத – தொடராக இருத்தல்.
- அறிவிப்பாளர் தொடரில் இடம்பெறுகின்ற ஒவ்வொரு வரும் நேர்மையானவராகவும், தேவைப்படும் போது சரியான முறையில் ஒப்புவிப்பதற்காக மனன அடிப்படையிலோ, எழுத்துருவிலோ ஹதீஸ்களைப் பாதுகாத்து வைத்தவராகவும் இருத்தல்.
- தமது அறிவிப்பு தம்மை விட நம்பகமான அறிவிப்பாளர்களுடைய அல்லது அதிகாமான அறிவிப்பாளர்களுடைய அறிவிப்புக்கு முரண்படாதிருத்தல்.
- அறிவிப்பில் மறைமுகமான குறைபாடுகள் எதுவும் இல்லாதிருத்தல்.

இவ் 5 நிபந்தனைகளுக்கும் உட்பட்ட ஹதீஸ்களை "ஸஹீஹானவை" எனத் தீர்மானத்தனர்.

இதற்கு பொதுவாக புகாரி மற்றும் முஸ்லிம் போன்ற கிரந்தங்களில் இடம்பெற்றுள்ள ஹதீஸ்களை உதாரணமாகக் காணலாம்.

மேலும், ஆதாரபூர்வமானவையாகக் கருதப்படும் ஹதீஸ்களை ஏற்று நடைமுறைப்படுத்த வேண்டும் என்பதில் அறிஞர்கள் மத்தியில் முரண்பாடெதுவும் இல்லை. ஒரு விஷயத்திற்கு ஆதாரமாக ஆதாரபூர்வமான ஒரு ஹதீஸ் மாத்திரம் போதுமானதாகும். அது ஆஹாத் வகை - தனிநபர்கள் அறிவிக்கின்ற - ஹதீஸாக இருப்பினும் சரியே! சிலர் அகீதா தொடர்பான விவகாரங்களில் இவ்வகையைச் சார்ந்த ஆதாரபூர்வமான செய்திகளைக் கூட ஏற்க மறுக்கின்றனர். இந்நிலைப்பாடு பிழையானதாகும். ஏனெனில் அகீதா தொடர்பான ஹதீஸ்களும் ஹலால், ஹராம் போன்ற சட்டங்களுடன் தொடர்புடைய பல்வேறு விவகாரங்கள் பற்றிப் பேசுகின்ற ஹதீஸ்களும் ஆஹாத் வகையைச் சார்ந்தவையாகவே உள்ளன. இதற்குப் பின்வரும் ஹதீஸ்களை உதாரணங்களாகக் கூறலாம். அவையாவன:

- **அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள். செயல்கள் அனைத்தும் எண்ணங்களைப் பொறுத்தே அமைகின்றன.**

**அறிவிப்பவர் : ஹஸ்ரத் உமர் (ரழி) அவர்கள்**

**நூல்: புகாரி: (1)**

இந்த நபி மொழி ஆஹாத் வகையைச் சார்ந்தது. இது அகீதா, இபாதத், கொடுக்கல் வாங்கல், திருமணம் போன்ற அனைத்துவிடயங்களுக்கும் அடிப்படையான ஹதீஸாகும்.

- **அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறியதாவது (ஒருவர்) ஒரு பெண்ணையும் அவளுடைய தந்தையின் சகோதரியையும் ஒரேநேரம் மனைவியராக்கிக் கொள்ளளாகாது. அவ்வாறே ஒரு பெண்ணையும் அவளுடைய தாயின் சகோதரியையும் ஒரேநேரம் மனைவியராக்கிக் கொள்ளலாகாது.**

**அறிவிப்பவர்: அபூஹுரைரா (ரழி)**

**நூல்: புகாரி 5109 முஸ்லிம் : 2742- 2749**

இந்த நபிமொழியும் ஆஹாத் வகையைச் சேர்ந்தது. இது சரீஅத்துடைய நடைமுறைச் சட்டங்கள் தொடர்பாகப் பேசுகின்றது.

ஆகவே, ஒரு நபிமொழி மேற்கூறப்பட்ட 5 நிபந்தனைகளுக்கும் உட்பட்டு ஆதாரபூர்வமாக வந்துவிட்டால், அதனை ஏற்றுக் கொள்ள வேண்டும். அது 'முதவாதிர்' வகையைச் சேர்ந்ததா 'ஆஹாத்' வகையைச் சேர்ந்ததா என்று பார்க்க வேண்டியதில்லை. இதுவே அஹ்லுல்லுன்னா வல் ஜமாஅத்தினருடைய நிலைப்பாடாகும்.

மேற்கூறப்பட்ட 5 நிபந்தனைகளுக்கும் உட்பட்ட ஸஹீஹான ஹதீஸ்கள் பல்வேறு வகைகளாகத் தரப்படுத்தப்பட்டுள்ளன. இவற்றிற் சில மிகத் தரமுயர்ந்தனவாக உள்ளன. இன்னும் சில தரத்தில் குறைந்தனவாக்க் காணப்படுகின்றன. இதனை ஹதீஸ்கலை அறிஞர்கள் பின்வருமாறு வகைப்படுத்தியுள்ளனர்

1) புகாரி (ரஹ்) மற்றும் முஸ்லிம் (ரஹ்) ஆகிய இருவரும் ஒருமித்து அறிவித்தவை.
2) இமாம் முஸ்லிம் (ரஹ்) இன்றி புகாரி (ரஹ்) மாத்திரம் தமது ஸஹீஹ் எனும் கிரந்தத்தில் பதிவு செய்தவை.
3) இமாம் புகாரி (ரஹ்) இன்றி இமாம் முஸ்லிம் (ரஹ்) மாத்திரம் தமது கிரந்தத்தில் பதிவு செய்தவை.
4) இவ்விருவரதும் நிபந்தனைகளுக்கு உட்பட்டும் இவர்கள் இருவரும் பதிவு செய்யாதவை.
5) இமாம் புகாரி (ரஹ்) அவர்களுடைய நிபந்தனைகளுக்கு மாத்திரம் உடபட்டும் அவர் பதிவு செய்யாதவை.
6) இமாம் முஸ்லிம் (ரஹ்) அவர்களுடைய நிபந்தனைகளுக்கு உபட்டும் அவர் பதிவு செய்யாதவை.
7) இமாம் புகாரி (ரஹ்) , இமாம் முஸ்லிம் (ரஹ்) ஆகிய இருவரும் தவிர்ந்த இமாம் இப்னு குஸைமா (ரஹ்), இமாம் இப்னு ஹிப்பான் (ரஹ்), இமாம் ஹாகிம் (ரஹ்) போன்றவர்கள் ஸஹீஹ் எனக் கருதியவை.

இது ஸஹீஹான ஹதீஸ்கள் மத்தியில் பொதுவானதொரு வகைப்படுத்தலாகும். எனவே, ஹதீஸ்கள் தருகின்ற கருத்துக்கள், அவற்றின் வெளித்தோற்றத்தில் ஒன்ரோடொன்று முரண்படுவதை போன்று தென்பட்டால் (ஸஹீஹான ஹதீஸ்கள் நேரடியாக ஒருபோதும் முரண்பட மாட்டாது என்பதைக் கவனத்திற் கொள்ள வேண்டும்) அப்போது அவற்றுக்கிடையில் உடன்பாடு காண்பதற்கும், ஒன்றைவிட மற்றொன்றை முதன்மைப் படுத்துவதற்குமே இந்தப் பொதுவான வகைப்படுத்தல் பயன்படுகிறது.

ஸஹீஹான ஹதீஸ்களில் நாஸிக் (மாற்றிய) , மன்ஸூக் (மாற்றப்பட்ட) ஆகிய இரு வகை ஹதீஸ்கள் இருக்கின்றன. இவற்றில் மன்ஸூகான (மாற்றப்பட்ட) ஹதீஸ்கள் நடைமுறையில் அமுல் செய்யப்படமாட்டாது.

மேற்கூறப்பட்ட 5 நிபந்தானைகளுக்கும் உட்பட்ட வகையில் ஆதாரபூர்வமான (ஸஹீஹான) ஹதீஸ்களை மாத்திரம் முதன் முதலில் தொகுத்து எழுதியவர் இமாம் புகாரி (ரஹ்) அவர்களும் அவரை அடுத்து இமாம் முஸ்லிம் (ரஹ்) அவர்களுமாவர்.

இமாம் இப்னுஸ் ஸலாஹ் (ரஹ்) கூறியதாவது : முதன் முதலில் ஸஹீஹான ஹதீஸ்களை மாத்திரம் ஒன்று திரட்டி எழுதியவர் இமாம் புகாரி (ரஹ்) அவர்களாவர். அடுத்து இமாம் முஸ்லிம் (ரஹ்) அவர்களாவர். இவ்விருவரது இரு நூற்களும் இஸ்லாத்தின் மூலாதாரங்களில், அல்குர்ஆனுக்கு அடுத்த இடத்தை வகிக்கின்றதன.

இவ்விருவரதும் ஹதீஸ் கிரந்தங்கள் இரண்டும் "ஸஹீஹ்" எனும் பெயரில் அறியப்படுகின்றன. இவ்விரண்டிலும் இமாம் புகாரி (ரஹ்) அவர்களுடைய கிரந்தத்தில் இடம் பெற்றுள்ள ஹதீஸ்கள் தரத்தில் கூடியவையாகும்.

இவ்விரு நூற்களிலும் ஸஹீஹான ஹதீஸ்கள் மாத்திரம் இடம் பெற்றிருந்தாலும், இவை அல்லாத இன்னும் பல ஆதாரபூர்வமான ஹதீஸ்கள் பல்வேறு கிரந்தங்களில் காணப்படுகின்றன.

இவ்விரு நூற்கள் தொடர்பாக ஏராளமான நூல்கள் ஏற்கனவே வெளிவந்து விட்டன. இன்னும் வெளிவந்த கொண்டிருக்கின்றன.